# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1927/56 - 2015 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2015.08.14

*1927/56 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

வத்தேகம நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 9 (ப) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, வத்தேகம நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் வத்தேகம நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு
அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 16.

தகனசாலைகள் நடவடிக்கைகள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் வத்தேகம நகர சபையின் தகனசாலைகளது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும், முறைப்படுத்தும் துணைவிதிகள் எனப்படும்.

2. வத்தேகம நகர சபைக்கு உரித்தான தகனசாலைகளைப் பயன்படுத்துதல், நிர்வகித்தல், அந்த தகனசாலைகளைப் பயன்படுத்துவதற்குரிய கட்டணங்களை விதித்தல், அறவிடுதல் என்பவற்றுக்காக இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. தலைவர் அல்லது அவர் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் ஒருவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி நகர சபைக்குச் சொந்தமான தகனசாலைகளில் எந்தவொரு இறந்த உடலையோ அல்லது அதன் பாகங்களையோ அல்லது மனித முளையத்தையோ தகனம் செய்ய முடியாது.

4. இந்தத் துணைவிதிகளின் 3 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கென இங்கு விண்ணப்பிப்பவர் எனக் குறிப்பிடப்படுபவரால் அட்டவணை 1 வின் மாதிரிக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணபப்படிவத்தைப் பின்வரும் ஆவணங்களுடன் தலைவரிடமோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ கையளித்தல் வேண்டும்.

(i) இறந்தவருக்கும் விண்ணப்பிப்பவருக்கும் இடையிலுள்ள உறவை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு ஆவணம் (இறந்தவர் வசித்துவந்த பிரிவின் கிராம அலுவலர் அல்லது பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவர் வழங்கிய சான்றிதழ் இதற்கெனப் போதுமானது. மேலும், விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சான்றிதழ்களும் இறந்தவருடனான உறவை உறுதிப்படுத்தப் போதுமானவை) ;

(ii) விண்ணப்பிப்பவரது தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி அல்லது விண்ணப்பிப்பவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதும் ஒரு ஆவணம் ;

(iii) 1975 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க திருமண, பிறப்பு மற்றும் இறப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட பிறப்பு, இறப்புக் கட்டளைச் சட்டத்தின் 110 ஆவது அத்தியாயத்தின் II ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிறப்பு, இறப்புப் பதிவாளரினால் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ், மேலும் இறந்த உடல் துங்ஓய நகர சபையின் தகனசாலையில் தகனம் செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) இறந்தவரது மரணம் தொடர்பில் குற்றவியல் நீதி விசாரணையின் கீழ் விசாரணைகள் நடைபெற்றதெனின், விசாரணை செய்த மரண விசாரணை அதிகாரி அல்லது நீதிபதி என்போரால் 1975 ஆம் ஆண்டின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின் 41 (இ) பிரிவின் கீழ் இறந்த உடல் தகனம் செய்யப்பட முடியும் என அனுமதி வழங்கப்பட்ட சான்றிதழ் ;

(v) இறந்தே பிறந்த உடலெனின், பிறப்பு இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின் 41 (1) ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்.

5. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம், தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அவை கிடைக்கப்பெறும் ஒழுங்கின்படி பதியப்படும். அதே ஒழுங்கின்படி தகனம் செய்யப்படும் நேரம் குறிக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

6. நகர சபை எல்லைக்குள் வசித்த ஒருவரது இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான தகனசாலைக் கட்டணமாக 6,000 ரூபாவும், பிரதேச சபைக்கு வெளியில் வசித்த ஒருவரது இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கென 7,000 ரூபாவும் கட்டணமாக நகர சபை அலுவலகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இந்தக் கட்டணத்தொகை நகர சபையின் இணக்கத்துடன் காலத்துக்குக்காலம் திருத்தம் செய்யப்பட முடியும். இதனைக் காலத்துக்குக்காலம் சபை தீர்மானம் செய்ய முடியும். கட்டண விபரங்கள் சபையின் அலுவலகத்திலும் தகனசாலைகளிலும் பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

7. இறந்த உடலைத் தகனம் செய்யப் பொறுப்பேற்க முடியாதெனின், அதற்கான காரணத்தை உடனடியாக விண்ணப்பதாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

8. நாளாந்தம் காலை 6.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மட்டுமே தகனம் செய்வதற்காக இறந்த உடல்கள் கையளிக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் தகனம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திலோ அல்லது அதற்கு முன்னரோ இறந்த உடலைத் தகனம் செய்வதற்காக தகனசாலைப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தாமதமாக ஒப்படைப்பதன் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களையோ அல்லது நட்டங்களையோ நகர சபை பொறுப்பேற்காது.

10. ஒவ்வொரு தகனசாலையிலும் தகனம் செய்யப்படும் உடல் தொடர்பாக விண்ணப்பிப்பவர் பெயர், முகவரி, இறந்தவரது பெயர், அவர் இறப்பதற்கு முன்னர் வசித்த முகவரி, விண்ணப்பதாரிக்கும் இறந்தவருக்கும் இடையிலான உறவு, தகனம் செய்யப்பட்ட திகதி, நேரம் போன்ற தகவல்களைக் கொண்ட பதிவேட்டைத் தகனசாலையின் பொறுப்பாளர் பேணிவருதல் வேண்டும்.

11. தகனசாலையில் உடல் தகனம் செய்யப்படும் தருணத்தில் இயந்திரக் கோளாறு காரணமாக தகனத்தை நிறைவேற்ற முடியாது போகும் தருணத்தில் தலைவரது ஆலோசனைக்கமைய உடல் தகனம் பற்றிய மாற்றொழுங்குகளை மேற்கொள்ள விண்ணப்பதாரி இணங்குதல் வேண்டும்.

12. இறந்த உடல் தகனம் செய்யப்பட்டு 07 நாட்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரோ உரிய அஸ்தியைப் பொறுப்பேற்றல் வேண்டும். உரிய காலத்துக்குள் பொறுப்பேற்கப்படாத அஸ்தி பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நகர சபைக்கு எதிராக எவரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிமையில்லை.

13. தகனசாலையின் பொறுப்பாளர் அல்லது தலைவரது அனுமதியின்றி தகனசாலையின் வளவுக்குள் நுழைதல் குற்றமாகும். எனினும் இறந்த உடலைத் தகனம் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருடன் வருகை தருவோருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவே கருதப்படும்.

14. தகனசாலையின் வளவுக்குள் அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்து கொள்வதோ அல்லது வளவுக்குள் அமைந்துள்ள சபையின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதோ, தகனசாலையின் பொறுப்பாளர் அல்லது அவரது உதவியாளர்களது கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதோ கூடாது. அவ்வாறான நட்டங்களோ சேதங்களோ ஏற்படின் உரிய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரே அவற்றைப் பொறுப்பேற்றல் வேண்டும். உரிய நட்டத்தை மதிப்பிட்டு அதுபற்றித் தெரிவிக்கப்பட்ட பின் உரிய தொகையை அவர் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி உரிய தொகையைத் தண்டப்பணமாக அறவிட்டுக்கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

15. நகர சபையின் எழுத்துமூல அனுமதியின்றித் தகனசாலையின் வளாகத்தை அலங்காரம் செய்தல் கூடாது.

16. பராமரித்தலுக்கும் திருத்த வேலைகளுக்குமென ஒரு தகனசாலையைக் குறிப்பிட்ட காலத்துக்கு மூடிவைக்க நேரும் பட்சத்தில் அது பற்றிய அறவித்தலைத் தகனசாலையின் பொது இடத்தில் பார்வையில் படும் வண்ணம் அறிவித்தல் வேண்டும்.

17. அஸ்தியை அகற்றிக்கொள்வதில்லையெனின், தகனசாலை வளவுக்குள் இடவசதி செய்யப்பட்டுள்ளவாறு இறந்தவரது பெயரில் ஓரிடத்தில் அவரது அஸ்தியை வைப்புச் செய்ய முடியும். இதற்கென அட்டவணை II இல் தரப்பட்டுள்ளவாறு மாதிரிப் படிவத்தில் விண்ணப்பித்துப் பின்வரும் கட்டணங்களைச் செலுத்திய பின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு குறித்த அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தக் கட்டணங்கள் நகர சபையின் தீர்மானத்துக்கமைய காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட முடியும்.

அஸ்தியை வைப்புச் செய்யும் இடத்தை வாடகைக்கு விடுதல்.

| | ரூபா சதம் |
|---|---|
| உரிமையாளர் உரிய இடத்தை நிர்மாணித்தல் | 6,400.00 |
| இடத்தைச் சபை நிர்மாணித்துத் தருவதெனின் | 10,000.00 |
| இடத்தைப் பராமரிப்புச் செய்வதற்கான கட்டணம் (5 வருடங்களுக்கு) | 2,500.00 |

18. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறும் பட்சத்தில் அது குற்றமாகக் கருதப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்றின் மூலம் அவர் குற்றவாளியாகக் காணப்படின் வழங்கப்படக்கூடிய உச்ச

அளவுத் தண்டனையையும், சட்டத்தைத் தொடர்ந்து மீறும் பட்சத்தில் அதனையும் குற்றமாகக் கருதி தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அதுபற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டும் அந்தத் தவறு தொடர்ந்தும் செய்யப்பட்டால், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் உச்ச அளவுத் தண்டனையாக நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தின் 153 (2) ஆவது பிரிவின் கீழ் உச்சபட்ச தண்டமும் மேலதிகத் தண்டமும் விதிக்கப்படும்.

19. 18 ஆவது துணைவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப்பணம் நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

20. பதங்கள் பற்றிய அர்த்தங்கள் தேவைப்பட்டாலன்றி,

(i) "சபை" என்பது, வத்தேகம நகர சபையையும் ;

(ii) "தலைவர்" என்பது, உரிய காலத்தில் வழக்கிலுள்ள எழுத்துமூல சட்டத்துக்கு ஏற்றவாறு வத்தேகம நகர சபைக்குத் தெரிவு செய்யப்படும் தலைவரையும் ;

(iii) "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,

(iv) "இறந்த உடல்" என்பது, மனிதனின் இறந்த உடல் அல்லது உடலின் பகுதி அல்லது இறந்தே பிறந்த உடலையும்,

(v) "தகனசாலைப் பொறுப்பாளர்" என்பது, சபைக்கு உரித்தான தகனசாலையின் பொறுப்பாளராகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ள ஒருவரையும் குறிக்கும்.

சொற்கள் தொடர்பில் ஏதும் கருத்து பேதங்கள் ஏற்படுமிடத்து இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

## அட்டவணை I

வத்தேகம நகர சபையின் தகனசாலையில் இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பிப்பவரது முழுப் பெயர் :----.

   முகவரி :----.

   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

   கிராம அலுவலர் பிரிவு :----.

2. இறந்தவரது பெயர் :----.

   இறந்தவர் வசித்த இடத்தின் முகவரி :----.

   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

   கிராம அலுவலர் பிரிவு :----.

   உள்ளூராட்சி அதிகாரப் பகுதி :----.

3. விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் உள்ள உறவு :----.

4. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :----.

5. இறப்பைப் பதிவு செய்த பதிவாளரின் பெயரும் முகவரியும் :----.

6. இறப்புக்கான காரணம் :----.

7. இறப்பு தொடர்பாக விசாரணை நடைபெற்றதாயின் அதன் திகதியும் நேரமும் :----.

8. விசாரணை செய்த அலுவலரது பெயரும் பதவியும் :----.

9. விசாரணை அதிகாரியின் முடிவு :----.

10. இறந்த உடலைத் தகனம் செய்ய அனுமதி வழங்குகின்றாரா என்ற விபரம் :----.

11. தகனம் செய்வதற்கான திகதியும் நேரமும் :----.
12. விண்ணப்பதாரரது தொலைபேசி இலக்கம் :----.

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். தேவையான சான்றிதழ்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

...........................................................
விண்ணப்பிப்பவரது கையொப்பம்.

திகதி:.................

---

***(அலுவலகப் பாவனைக்கு மட்டும்) :***

1. அனுமதிப்பத்திரத்தை வழங்க அனுமதிக்கிறேன்/அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கின்றேன்.

...........................................................
கையொப்பம்
தலைவர்/அதிகாரம் பெற்ற அலுவலர்,
வத்தேகம நகர சபை.

..................................
செயலாளர்,
வத்தேகம நகர சபை,
திகதி :............................

2. ..............................திகதிய ........................................ இலக்கம் கொண்ட பற்றுச்சீட்டின்படி ரூபா .................................. அறவிடப்பட்டுள்ளது.
3. அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரை செய்யவில்லை.

4. வேண்டுகோளை நிராகரிப்பதற்கான காரணங்கள் :

..................................................
இலிகிதரது கையொப்பம்.

திகதி :..............................

## அட்டவணை II

வத்தேகம நகர சபையின் பொது மயானத்தில் அஸ்தியை வைப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பிப்பவரது முழுப் பெயர் :----.

   முகவரி :----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
   கிராம அலுவலர் பிரிவு :----.

2. இறந்தவரது பெயர் :----.

   இறந்த வசித்த இடத்தின் முகவரி :----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
   கிராம அலுவலர் பிரிவு :----.
   உள்ளூராட்சி அதிகாரப் பகுதி :----.

வத்தேகம நகர சபையின் பொது மயானத்தில் அஸ்தியை வைப்புச் செய்வதற்கான ஒப்பந்தம்

வத்தேகம நகர சபைக்குச் சொந்தமான யட்டவர துங்ஓய என்ற இடத்தில் அமைந்துள்ள நகர சபையின் தகனசாலையில்................ ஆந் திகதி தகனம் செய்யப்பட்ட.............................................................. என்ற முகவரியில் வசித்த திரு./திருமதி:............................................... என்பவரது அஸ்தியை நகர சபையின் மயானத்தில் நிர்மாணிக்கப்படும் 18X 12 X 10 அங்குல இடப்பரப்பில் வைப்புச் செய்வதற்கென, அதற்கான அடிப்படைக் கட்டணமாக .......................................... ரூபா தொகையைக் குறித்த அஸ்தியின் பொறுப்பாளரான ................................................................................................ என்ற இடத்தில் வசிக்கும்......................................................................... ஆகிய நான், செலுத்துவதாகவும், குறித்த அஸ்தியை நிலையாக அவ்விடத்தில் வைப்புச் செய்வதற்கென ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை 2,500 ரூபாவுக்கான பராமரிப்புக் கட்டணமாக (இத்தொகை நகர சபையின் தீர்மானத்துக்கமைய இடைக்கிடை திருத்தியமைக்க முடியும்) வத்தேகம நகர சபையில் செலுத்தி ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்வதெனவும் இத்தால் இணங்குகின்றேன். இந்தப் பராமரிப்புக் கட்டணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை வத்தேகம நகர சபையில் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், நகர சபையினால் அறிவிக்கப்பட்ட பின்னரும் குறித்த தொகையை நான்

செலுத்தத் தவறினால், குறித்த அஸ்தியை அவ்விடத்திலிருந்து அகற்றிவிட வத்தேகம நகர சபைக்கு இத்தால் அதிகாரம் வழங்குவதாகவும், இது தொடர்பாக நகர சபை விதிக்கும் நியாயமான சட்டவிதிகளுக்கு இணங்குவதாகவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

..........................................
கையொப்பம்.

பெயர் : ..........................................
அஸ்தியின் பொறுப்பாளர் :..........................................

திகதி :..............................

சாட்சிகள் :

1 :.....................................................................................................
2. :..................................................................................................

.........................
தலைவர்,
வத்தேகம நகர சபை.

8- 858

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.